(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.NO.416/2019 PW 2

Name சந்திரசேகர்

Father's Name

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

01.09.2023.

முதல் விசாரணை

நான் தற்போது ஆதிதிராவிட நலத்துறை திருவள்ளூரில் சார்ஆய்வாளராக உள்ளேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை கிடைக்கப்பெற்றது. அழைப்பாணையில் நீதிபேராணை எண் 25497/2018 உத்தரவு முன்னிலைக்கு திருத்தணி கிராமம், திருத்தணி வட்டம், புல எண்.60/3 மற்றும் 60/7எ சொத்துக்களை அளந்து வரைப்படம் மற்றும் அறிக்கையினை தாக்கல் செய்தது குறித்து ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க கூறப்பட்டுள்ளது அதன் முன்னிலைக்கு நான் 2019ல் திருத்தணி வட்ட சார்ஆய்வாளராக பணியில் இருந்தபோது தயார் செய்த வரைப்படம் தாக்கல் செய்கிறேன். அது **வாதசாஆ 41** ஆகும். காண்பிக்கப்பட்ட வாதசாஆ 36 நான் தாக்கல் செய்துள்ள அதே வரைப்படம் தான் இது. நான் தயாரித்து தாக்கல் செய்த அறிக்கை திருத்தணி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருக்கும். நான் வாய்மொழியாக கேட்டதற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் எனது அறிக்கை கிடைக்கவில்லை என்று கூறிவிட்டார்கள். 21.12.2018 அன்று நான் நில அளவை செய்தேன். புல எண் 60/3, 60/7எ மற்றும் 60/7சி நிலங்களை அளந்தேன். மனுதாரர் லோகநாதன் இருந்தார். எதிர்தரப்பில் ஒரு நபர் தான் இருந்தார். யார் என்று ஞாபகமில்லை. வட்டாட்சியர் எனக்கு கொடுத்த குறிப்பாணை அடிப்படையில் நான் நிலங்களை அளந்தேன். வட்டாட்சியர் இருதரப்பினருக்கும் அறிவிப்பு அனுப்பியதன் பெயரில் நான் நிலங்களை அளந்தேன். நான் தயார் செய்த அறிக்கையை வட்டாட்சியரிடம் அனுப்பி வைத்தேன். நான் பார்வையிட்ட சமயத்தில் 60/7சி என்கின்ற நிலம்

நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலைக்காக எடுக்கப்பட்டது. வரைப்படம் முன்னிலைக்கு 60/7எ 2ஏர் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன். 60/7எ மொத்த விஸ்தீரணம் 2 ஏர் மட்டும் தான். 60/7எ இல் 41 சதுரமீட்டர் வீடு கட்டப்பட்டு இருந்தது. அந்த வீடு கட்டுமானம் 60/3 புல எண் இடத்திலும் இருந்தது. நான் தாக்கல் செய்துள்ள வரைப்படம் புல எண் 60/7எ இடத்திற்கு மட்டும் தான். புல எண் 60/3 இடத்தை அளந்தேன் ஆனால் வரைப்படம் தயார் செய்யவில்லை. 60/7எ மற்றும் 60/3 இடங்களின் நான்கு எல்லைகளை நான் கண்டறிந்தேன். மொத்த புல எண் 60 நிலத்தில் 60/7எ என்கின்ற இடத்திற்கான வரைப்படம் மட்டும் தனியாக வண்ணமிட்டு காண்பித்துள்ளேன். கடை மற்றும் பிளாட்பார்ம் விஸ்தீர்ணம் 74 சதுரமீட்டர் ஆகும். நான்கு சதுரமீட்டர் படிகட்டுகள் வீட்டுடன் சேர்ந்ததாகும். 50 சதுர மீட்டர் மேற்படி புல எண் 60/7எ இடத்தில் நெடுஞ்சாலைக்காக எடுக்கப்பட்டிருந்தது. புல எண் 60/3க்கு செல்லுவதற்கான வழியைதான் பொதுவழி என புல எண் 60/7எ வரைப்படத்தில் சொல்லியுள்ளேன்.

**(வழக்கறிஞர் ஆஜரில் இருந்தபோதும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)**